# RWDS

# ஆண்டறிக்கை 2017-18

**ஊரகத் தொழிலாளர்கள் மேம்பாட்டு அணையம்**

1/230-3. பாரதிநகர், இராமநாதபுரம் - 623503,

மின்னஞ்சல்:palmyrahrwds@gmail.com,


தொலைபேசி எண்: 04567 – 230535,

அலைபேசி எண்: 94437 83341

# பொருளடக்கம்


- இராமநாதபுரம் மாவட்டம் வரைபடம்
- நிறுவனத் தகவல்
- அறிமுகம்
- நிறுவன அமைப்பு
- செயல் அறிக்கை
- அடைவுகள்
- பத்திரிக்கை செய்திகள்
- வரவு - செலவு தணிக்கை அறிக்கை

**இராமநாதபுரம் மாவட்ட வரைபடம்**



| நிறுவனத் தகவல் | |
|---|---|
| நிறுவனத்தின் பெயர் | ரூரல் வொர்க்கர்ஸ் டெவலப்மெண்ட் சொசைட்டி (RWDS) |
| பதிவு எண் | 93/2007 தமிழ்நாடு சங்க பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. |
| முகவரி | 1/230-3,பாரதி நகர், இராமநாதபுரம் - 623503 |
| அலைபேசி / தொலைபேசி எண் | 9443783341, 04567-230535 |
| முதன்மை நிர்வாகி | வெ.சௌந்திரமாலதி |
| வங்கியின் பெயர் | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி. இராமநாதபுரம். |
| | தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, இராமநாதபுரம் |
| | கரூர் வைஷ்யா வங்கி, பாரதிநகர் கிளை |
| PAN எண் | AAAAR6899M |
| FCRA எண் | 075990100 |
| 12 AA பதிவு எண் | C.NO.101/179/CIT-II/2008-09 |
| 80 G பதிவு எண் | C.No.102/179/CIT-II/2008-09 |
| UNIQUE ID: | TN/2017/0165744 |


### செயற்குழு உறுப்பினர்கள் விபரம்

| வ.எண் | பெயர் | பொறுப்பு |
|---|---|---|
| 1 | திரு. டி.ஆர். சந்திரன் அவர்கள் | தலைவர் |
| 2 | திரு. வெ.சௌந்திரமாலதி அவர்கள் | செயலாளர் |
| 3 | திருமதி.ஞா.பசுபதி அவர்கள் | பொருளாளர் |
| 4 | திரு.பொ.சுப்பிரமணியன் அவர்கள் | துணைத்தலைவர் |
| 5 | திரு.ச.சத்தியசேகரன் அவர்கள் | உறுப்பினர் |
| 6 | திரு.பா.கண்ணன் அவர்கள் | உறுப்பினர் |
| 7 | திருமதி.அ.பசீரா பர்வீன் அவர்கள் | உறுப்பினர் |


### பொதுக்குழு உறுப்பினர்கள் விபரம்

| வ.எண் | பெயர் | பொறுப்பு |
|---|---|---|
| 1 | திரு. டி.ஆர். சந்திரன் அவர்கள் | தலைவர் |
| 2 | திருமதி.வெ.சௌந்திரமாலதி அவர்கள் | செயலாளர் |
| 3 | திருமதி. ஞா.பசுபதி அவர்கள் | பொருளாளர் |
| 4 | திரு.பொ.சுப்பிரமணியன் அவர்கள் | துணைத்தலைவர் |
| 5 | திரு. ச.சத்தியசேகரன் அவர்கள் | உறுப்பினர் |
| 6 | திரு.பா.கண்ணன் அவர்கள் | உறுப்பினர் |
| 7 | திருமதி.அ.பசீரா பர்வீன்அவர்கள் | உறுப்பினர் |
| 8 | திருமதி.து.கனகவள்ளி அவர்கள் | உறுப்பினர் |
| 9 | திருமதி.ந.ராஜமணி அவர்கள் | உறுப்பினர் |

# நிறுவன அமைப்பு


மேலாண்மைக் குழு
இயக்குநர்
கணக்காளர்
ஒருங்கிணைப்பாளர்
ஆவணத்தொகுப்பாளர்
மேம்பாட்டுப்பணியாளர்கள்

## ORGANGRAM OF THE RURAL WORKERS DEVELOPMENT SOCIETY



# ஆண்டறிக்கை 2017 – 2018

**முகவுரை**

ரூரல் வொர்க்கர்ஸ் டெவலப்மென்ட் சொசைட்டி நிறுவனம் 2007ம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சமூக ஆர்வலர் குழுவினால் துவக்கப்பட்டது. இக்குழுவானது கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஒடுக்கப்பட்ட பனைத்தொழிலாளர் மக்களின் மேம்பாட்டுக்காக பணி செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இது தமிழ்நாடு சங்கப்பதிவுகள் சட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது – பதிவு எண்: 93/2007. இதன் தலைமையகம் இராமநாதபுரத்தில் உள்ளது. இந்நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள் மற்றும் கிராமப்புற ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்கள் குறிப்பாக பனைத்தொழிலார்கள் மத்தியில் பணி செய்து வருகிறது.

**பணித்தளம்:**

மாநிலம்: தமிழ்நாடு

மாவட்டம்: இராமநாதபுரம்.

ஒன்றியங்கள்: இராமநாதபுரம், கடலாடி, திருப்புல்லானி, மண்டபம், பரமக்குடி, போகலூர், திருவாடனை, ஆர்.எஸ்.மங்கலம், முதுகளத்தூர், கமுதி மற்றும் நைனார்கோவில்.

**தொலைநோக்குப் பார்வை :**

தமிழகத்தில் பனைத்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களை சமூக, பொருளாதார ரீதியில் மேம்பாடு அடையச் செய்வதாகும்

**இலட்சியம் :**

- ஜாதி, மதம், இனம், அரசியல் இவைகளுக்கு அப்பாற்பட்டு அனைத்து பனைத்தொழிலாளர்களையும் ஒருங்கிணைத்து வாழ்வாதார மேம்பாட்டுற்காக பாடுபடுதல்
- தங்களின் தற்போதைய நிலையை உணர்ந்து மேம்பட்ட நிலையை அடைய தேவையான அனைத்து திட்டங்களையும் வகுத்து வளர்ச்சித் திட்டங்களில் அவர்களையும் பங்கேற்க வைத்தல்.
- பனைத்தொழிலாளர்களை அரசு மற்றும் இதர துறைகளுடன் இணைத்து விடுதல்.
- இக்கால குழந்தைகள் வரும் காலத்தில் மாண்புடனும் நலமுடனும் வாழ குழந்தை உரிமைகளை நிலைநிறுத்துதல்
- மேற்கண்ட நோக்கங்களை அடைய ரூரல் வொர்க்கர்ஸ் டெவலப்மென்ட் சொசைட்டி (RWDS) கீழக்கண்ட அணுகுமுறைகளில் பணிசெய்கிறது.
- பனைத்தொழிலாளர்களை ஒன்று திரட்டுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்
- கிராமம், வட்டார, மாவட்ட சங்கங்களை உருவாக்குதல் மற்றும் தொடர்ந்து செயல்படத் தூண்டுதல்
- பனைத்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களுடைய குழந்தைகளின் உரிமைகளை வென்றெடுக்க இணைந்த செயல்பாடுகள் முன்மாதிரி முயற்சிகளை மேற்கொள்ள எளிதமைத்து கொடுத்தல்.

**பணித்தள அறிமுகம்:**

இராமநாதபுரம் மாவட்டம் தென்தமிழகத்தின் கிழக்கு கடற்கரையோரமாக அமைந்துள்ளது. இது 4232ச.கி.மீ பரப்பளவு கொண்டது. இதன் மக்கள் தொகை 12,58,772. இது 11 வளர்ச்சி ஒன்றியங்களாகவும் 7 தாலுகாக்களாவும் பிரிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வறுமை, வறட்சி ஆகியவற்றில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இம்மாவட்டத்தில் மொத்த மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட இனத்தார் 28மூ மும் குழந்தைகள் 27.2மூ மும் உள்ளனர்.

எங்களின் பணித்தள கிராமங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தின் கிராமப்புற பகுதிகளை உள்ளடக்கியது. குடிதண்ணீர் என்பது மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. பெண்கள் குடிதண்ணீருக்காக பல மைல் தூாரம் கால்நடையாக நடந்து தலையில் சுமந்து வருகின்றனர். முக்கியமாக குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான கல்வி சுகாதாரம் போன்றவை எட்டாக்கனியாகவே உள்ளன. அரசு இப்பிரச்சனையில் உரிய முனைப்பு காட்டுவதில்லை. மேலும் இராமநாதபுரம் மாவட்டம் சமூக பொருளாதார அளவில் ஒரு பின்தங்கிய பகுதியாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பணி செய்யும் பகுதிகள்: | மாவட்டம் | - 1 |
| | ஒன்றியம் | - 3 |
| | கிராமங்கள் | - 52 |
| | பஞ்சாயத்து | - 30 |

# செயல்பாடுகள்

**1.பனைத்தொழிலாளர்கள் சங்கக் கூடுகை :**

RWDS பணி செய்யும் பணி செய்யும் கிராமங்களில் உள்ள பனைத்தொழிலாளர்கள் கிளைச்சங்கங்களில் குழந்தைத்தொழிலாளர் முறை எதிப்பு மற்றும் குழந்தைகள் தொழிலாளர்கள் ஆவதை தடுப்பது குறித்தும் தீர்மானஙகள் நிறைவேற்றப்பட்டது. கடந்த ஆண்டில் 99 கிராம கிளைச்சங்கங்களில் 122+1611=1733 உறுப்பினர்கள் பங்கேற்புடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**2.குழந்தைத் தொழிலாளர் குழு கூட்டம்:**

குழந்தை தொழிலாளர் முறையினைத் தடுத்தல் மற்றும் அவர்களை மீண்டும் பள்ளியில் சேர்த்தல் எமது நிறுவனத்தின முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். 318 குழந்தை தொழிலாளர்கள் எமது பணித்தள கிராமங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 70% பேர் கடலாடி ஒன்றியத்தினை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது. பணித்தள கிராமங்களில் உள்ள குழந்தை தொழிலாளர்களை குழந்தை தொழிலாளர் குழு (CLC) என அமைத்துள்ளோம். கடலாடி பகுதியில் 9 கிராமங்களில் குழந்தை தொழிலாளர் குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இக்குழுக்கள் மாதம் ஒருமுறை கூடி பல்வேறு விபரங்களை விவாதிக்கின்றனர். அத்தோடு இதில் தாங்கள் ஒரு குழந்தை என்பதை உணரும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. தன்வயது ஒத்த குழந்தைகள் பிறரிடம் பகிர முடியாத பிரச்சனைகளையும், ஆசைகளையும் தேவைகளையும் பகிர்ந்து கொள்வதுடன் புத்தகம் வாசித்தல், தொழிலாளர் நலன் மற்றும் பாதுகாப்பு சார்ந்த விபரங்களை தெரிந்துகொள்கின்றனர் இவ்வாண்டில் 34 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன இதில் 93 ஆண் குழந்தைகளும் 181 பெண் குழந்தைகளும் பங்கேற்று பயனடைந்துள்ளனர்.





3. குழந்தைத் தொழிலாளர்கள் பெற்றோர் குழு

குழந்தைத் தொழிலாளர் முறையினை தடுப்பதற்காக எமது நிறுவனம் பல்வேறு வகையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக குழந்தைத் தொழிலாளர்

பெற்றோர்களை ஒரு குழுவாக உருவாக்கியுள்ளோம். இக்குழுவானது பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் கூடுதல் புரிதல் ஏற்படுத்தவும் பெற்றோர்களிடம் உறவினை மேம்படுத்தவும் உதவுகின்றது.

இவ்வாண்டு 1.கீழவலசை, 2.கன்னிகாபுரி, 3.ந.காமராஜபுரம், 4.மாணிக்கநகர், 5.செல்வநாயகிபுரம், 6.கீழஅல்லிக்குளம், 7.இழந்தைக்குளம், 8.வெள்ளப்பட்டி, 9.குதிரைமொழி பாண்டியநகர் ஆகிய கிராமங்களில் குழந்தைத் தொழிலாளர்கள் பெற்றோர் குழு அமைக்கப்பட்டு மாதம் ஒரு முறை கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தில் குழந்தைகளுக்காக நாம் நேரத்தை ஒதுக்கி அவர்கள் வேலை செய்யும் இடங்களில் நடைபெறும் விபரங்களை பகிர்ந்து கொள்ள முன் வர வேண்டும் போன்ற கருத்துக்கள் பகிரப்பட்டன. மேலும் இக்கூட்டத்தில் 528 பெற்றோர்கள் கலந்துகொண்டுள்ளனர்.



4. குழந்தை தொழிலாளர் எதிர்ப்புதினம் - பேரணி – கருத்தரங்கம்

குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம் 12.06.2017 அன்று காவாகுளம் கடலாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெற்றது. இதில் குழந்தை தொழிலாளர்கள், பெற்றோர்கள், பனைத்தொழிலாளர் சங்க பிரதிநிதிகள், முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் மற்றும் பிரதிநிதிகள். மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு அலுவலர் திரு.துரைமுருகன், காவல்துறையினர் சைல்டு லைன் பொறுப்பாளர், பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர் நலத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் என 207 பேர் கலந்துகொண்டனர். திரு.சா.சாத்தையா, இயக்குநர், RWDS அவர்கள் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில். பேரணியை திரு.காளிதாஸ், ஆய்வாளர்- தொழிலாளர் நலத்துறை இராமநாதபுரம் அவர்கள் துவக்கி வைத்தார். காவாகுளம் நடுநிலைப்பள்ளியிலிருந்து தொடங்கிய பேரணி காவாகுளம் தெருக்கள் வழியாக சென்று மீண்டும் காவாகுளம் கடலாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் முடிவடைந்தது.





5. **குழந்தை தொழிலாளர் குறித்தான கலந்தாலோசனைக் கூட்டம்**

குழந்தை தொழிலாளர் நிலை குறித்தான கலந்தாலோசனைக் கூட்டம் 18-07-2017 அன்று இராமநாதபுரம் தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மஹாலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு.துரை முருகன் அவர்கள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு. திரு.எஸ் கருப்பசாமி அவர்கள் சைல்டு லைன் இராமநாதபுரம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டு குழந்தை தொழிலாளர்களின் பெற்றோர்களுக்கு கருத்துக்களை எடுத்துரைத்தனர். ஊராட்சி அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பினை வலுப்படுத்தவும் அனைத்து ஊராட்சிகளிலும் அதனை செயல்படுத்தவும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிற்கு கோரிக்கை வைக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்களை சந்தித்து அறிக்கையினை சமர்பித்ததன் விளைவாக உடனடியாக அனைத்து ஊராட்சிகளிலும் ஊராட்சி அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுவை செயல்படுத்திட ஆணை பிறப்பித்தார். இதன் விளைவாக கடலாடி ஒன்றியம் நரிப்பையூர் ஊராட்சியில் ஊராட்சி அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு செயல்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது. பெற்றோர்கள் தாங்கள் தொழில் செய்யும் இடங்களுக்கு அருகில் உள்ள பள்ளிகளில் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை பள்ளி சேர்ப்பு செய்திடவும், மேலும் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் வேலைக்கு அனுப்பும் பெற்றோர் மீதும் நடவடிக்கை எடுக்கவும் சட்டத்தில் வாய்ப்பு உள்ளது என கருத்துக்கள் கூறினர்.

1. பனங்காடுகளில் தொழில் செய்யும் பனைத்தொழிலாளியின் குடும்பத்திலுள்ள குழந்தைகளுக்கு 2009 கல்வியுரிமைச் சட்டத்தின்படி அருகிலேயே உள்ள பள்ளிக்கூடங்களில் கல்வி பயிலும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்.

2. 14 வயதிற்குள் குழந்தைகளை வேலைக்கு அமர்த்தப்பட்டால் அரசு சட்டப் படி நடவடிக்கை எடுக்க வேண்டும்

6. சுகாதார கூடுகைகள் நடத்துதல் :

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குழந்தைத்தொழிலாளர்களுக்கான மருத்துவ பரிசோதனையை தொடர்ந்து இந்த வருடம் அவர்களின் உடல் மற்றும் மன நோய்களுக்கான காரணங்கள் மற்றும் அவற்றினை களைவதற்கான தொடர்நடவடிக்கையாக RWDS பணி செய்யும் கிராமங்களில் சுகாதார குழுக்களை உருவாக்கி அவற்றின் வாயிலாக குழந்தைத்தொழிலாளர்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கான ஊட்டச்சத்து குறைபாடு,

பணியிடங்களில் ஏற்படும் உடலியல் பாதிப்புக்கள் குறித்து கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் கடலாடி ஒன்றியத்தில் 31 கூடுகைகளில் 152 பெற்றோர்கள் மற்றும் பெண்கள், குழந்தைகள் ஆகியோர் பங்கேற்று கலந்தாலோசித்தனர்.

கடலாடி, மண்டபம் மற்றும் திருப்புல்லாணி ஆகிய 3 ஒன்றியங்களிலும் 528 பெற்றோர்கள் மற்றும் 99 சங்கத்திலிருந்து 1733 உறுப்பினர்களும் கலந்து கொண்டு வளரிளம் பெண்கள் மற்றும் குழந்தைத்தொழிலாளர்களுக்கான சுகாதார செயல்பாடுகள் குறித்து கலந்தாலோசித்தனர். இதன் விளைவாக குழந்தைத்தொழிலாளர்களின் பெற்றோர்கள் வேலை செய்யும் இடங்களில் தங்கள் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து புரிந்துகொண்டு தங்கள் குழந்தைகளிடம் கருத்துகளை பகிரவும் அவர்களின் பிரச்சனைகள் குறித்து அக்கறை காட்டவும் செய்தனர்.

7. வளரிளம் குழந்தைகள் குழுக் கூடுகைகள் :

குழந்தைத்தொழிலாளர்களுக்கான குழுக்கூட்டங்களை வலுப்படுத்தவும், அவர்களுக்கான தன்னம்பிக்கையை வளர்க்கவும் பயிற்சியளிக்கப்பட்டது. இதன் தொடர்நிகழ்வாக குழந்தைத்தொழிலாளர்களுக்கு வாழ்க்கைத்திறன் பயிற்சியும் அளிக்கப்பட்டது. பள்ளி செல்லும் குழந்தைகளையும் இவர்களோடு இணைத்து மூத்த சிறுவர் மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு 9 கிராமங்களில் அமைக்கப்பட்டு 34 கூடுகைகள் நடத்தப்பட்டுள்ளது. அதில் 274 பள்ளி செல்லும் குழந்தைகளும் 76 குழந்தைத்தொழிலாளர்களும் கலந்து கொண்டுள்ளனர். இதன் மூலம் கல்வியின் முக்கியத்துவம் குறித்தும், குழந்தைகள் வேலைக்கு செல்வதில் உள்ள சிரமம் மற்றும் ஆபத்துகள் குறித்தும் விழிப்புணர்வு பெற்றுள்ளனர்.



**8. ஊராட்சி அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பினை செயல்படுத்துதல் :**

கடலாடி ஒன்றியத்தில் நரிப்பையூர், மூக்கையூர், சிறைக்குளம், கன்னிராஜபுரம், காவாகுளம், உசிலங்குளம் மற்றும் பிள்ளையார்குளம் ஊராட்சிகளிலும் திருப்புல்லாணி ஒன்றியத்தில் காஞ்சிரங்குடி ஊராட்சியிலும் ஊராட்சி அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பினை செயல்படுத்துதல் குறித்து சிறப்பு கிராம சபைக்கூட்டங்கள் நடத்தப்பட்டு கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



**9.கிராமசபை கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்:**

குழந்தைகளின் கல்வி மற்றும் சுகாதாரப்பிரச்சனைகளைத் தீர்க்கும் முகமாக பனைத்தொழிலாளர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் மற்றும் கிராம தன்னார்வலர்கள் கிராமசபைக் கூட்டங்களில் கலந்துகொண்டு அது தொடர்பான விவாதங்களில் ஈடுபட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வலியுறுத்துகின்றனர்.

1. குழந்தை தொழிலாளர் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும், குழந்தைத் திருமணம் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும், பள்ளி இடைவிலகல் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும் ஆகிய தீர்மானங்கள் காஞ்சிரங்குடி கிராம சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

2. கீழஅல்லிக்குளம் கிராமத்திற்கு குழந்தைகள் பள்ளிக்குச் சென்று வர மேம்பாலத்துடன் கூடிய சாலைவசதி செய்யப்படும், குழந்தை தொழிலாளர் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும், குழந்தைத் திருமணம் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும், பள்ளி இடைவிலகல் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும் அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டிடம் பெறுதல் ஆகிய தீர்மானங்கள் பிள்ளையார்குளம் கிராம சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

3. குழந்தைகள் 18 வயது வரை தொடர்ந்து கல்வி கற்க வேண்டும் குழந்தை தொழிலாளர் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும், குழந்தைத் திருமணம் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும், பள்ளி இடைவிலகல் இல்லாத ஊராட்சியாக காக்கப்படும் மற்றும்

குழந்தைகள் பாதுகாப்புக் குழுவை உருவாக்குதல் ஆகிய தீர்மானங்கள் மூக்கையூர் கிராம சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

4. பெரியநாயகிபுரம் கிராமத்தில் புதிய அரசு ஆரம்பப்பள்ளி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும், குழந்தைகள் பாதுகாப்புக்குழுவை மாதமாதம் செயல்படுத்த வேண்டும். குழந்தை தொழிலாளர் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும், குழந்தைத் திருமணம் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும், பள்ளி இடைவிலகல் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும் ஆகிய தீர்மானங்கள் நரிப்பையூர் கிராமசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

5 குழந்தைத் திருமணம் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும், பள்ளி இடைவிலகல் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும் மற்றும் குழந்தைகளை துன்புறுத்துதலிலிருந்து பாதுகாக்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் மாரியூர் கிராம சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

### 10. **குழந்தைத் திருமணத்தை தடுத்தல்:**

வரதட்சனையின் தீமைகள் விளைவுகளால் பல பெண்களின் வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக நமது பணித்தள கிராமங்களில் பல்வேறு கிராமங்களில் இளவயது திருமணம் நடைபெற்றுள்ளது. எனவே இளவயது திருமணத்தைத் தடுக்கவும் அது குறித்துப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் 26 பனைத்தொழிலாளர் சங்க கூட்டங்களில் இது தொடர்பாக தீர்மாணங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### 11. இடம்பெயர்ந்த குடும்பங்கள் ஆய்வு :

பனைத்தொழில் நிமித்தமாக குடும்பங்கள் இடம்பெயர்ந்து செல்வதால் பள்ளி இடைவிலகல் மற்றும் குழந்தை தொழிலாளர் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. இதனைப் பற்றிய ஒரு புரிதலை உருவாக்கும் முகமாக இடம்பெயர்ந்த குடும்பங்கள் ஆய்வு இவ்வாண்டு 1.பெரியநாயகிபுரம், 2.சத்திரம், 3.கன்னிகாபுரி செவல்காடு, 4.எல்லப்பிஞ்சை, 5.கடுகுசந்தை, 6.கன்னிராஜபுரம் செவல்காடு, 7.தரைக்குடி, 8.பூப்பாண்டியபுரம் செவல்காடு, 9.கும்பசாலை, 10.கீழஅல்லிகுளம் மற்றும் 11. குதிரைமொழிபாண்டியநகர் ஆகிய 11 பனங்காடுகளில் உள்ள 553 குடும்பங்களில் நடத்தப்பட்டது. இவ்வாய்விற்கென கேள்விதாள் தயாரிக்கப்பட்டு அதில் தகவல்கள் சேகரிக்கப்பட்டது. சேகரிக்கப்பட்டத் தகவல்கள் தொகுக்கப்பட்டு அறிக்கையாகத் தயாரிக்கப்பட்டது.

பனங்காடுகளில் உள்ள குடும்பங்கள் சந்திப்பு

12. **வீடு சந்திப்பு**

பெற்றோர்களிடம் பள்ளி இடைவிலகல், குழந்தைத் தொழிலாளர் முறை, குழந்தைத் திருமணம் ஆகியவற்றைக் குறித்து அதிகமான விழப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் அவர்களை நேரடியாக வீடுகளில் தனித்தனியாக எமது பணியாளர்கள் சந்திக்கின்றனர். இதில் ஒரு குடும்பத்தில் உள்ள அனைவருடனும் நெருக்கமான உறவு எற்பட வாய்ப்பு உள்ளது. இதனால் குழந்தைகளின் உரிமைகள் தொடர்பாக அனைவருக்கும் புரிதல் ஏற்பட்டுள்ளது. இவ்வாண்டில் 2416 குடும்பங்களை ஒவ்வொரு மாதத்திலும் அவர்களை சந்தித்துள்ளோம் என்பது குறிப்பிடத்தக்கது.

13. **சிறுவர் மன்றக் கூட்டங்கள்:**

குழந்தைகளின் பங்கேற்பு உரிமையை உறுதி செய்யவும், அவர்களுக்கு சமூக கல்வியை கற்றுக்கொடுக்கவும் சிறுவர் மன்றங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொரு சிறுவர் மன்றங்களிலும் அக்கிராமத்தில் உள்ள 6 முதல் 18 வயது வரையிலான குழந்தைகள் உறுப்பினர்களாக உள்ளனர். மாதம் இருமுறை கூடும் இம்மன்றத்தில் குழந்தைகள் தங்களின் பள்ளி அனுபவங்களை பகிர்ந்து கொள்கின்றனர், தங்களின் தேவைகள் பற்றி விவாதிக்கின்றனர். மேலும் குழுவாக இணைத்து குழந்தைகளுக்கான துளிர் மற்றும் ஊற்றுக்கண் புத்தகங்களை வாசித்தல் மற்றும் அதன் கருத்துக்களை விவாதித்தல் ஆகியன நடைபெறுகின்றது. குழுவாக இணைந்து பாரம்பரிய கிராம விளையாட்டுக்களை விளையாடுதல் பொது விசயங்கள் குறித்து பேசுதல் ஆகியனவும் நடைபெறுகின்றது. 52 கிராமங்களிலும் 52 சிறுவர் மன்றக் கூட்டங்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது





சிறுவர் மன்றக் கூட்டம்

**14.பனைத்தொழிலாளர் நல வாரியம் மூலம் பெறப்பட்டக் கல்வி உதவித் தொகை பட்டியல்:**

| பயனாளிகள் | மொத்தக் குழந்தைகள் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 10ம் வகுப்பு | 5 | 1000 x 5 | 5000 |
| 10ம் வகுப்பு தேர்ச்சி | 1 | 1000 x 1 | 1000 |
| 11ம் வகுப்பு | 1 | 1500 x1 | 1500 |
| 12ம் வகுப்பு | - | 1500 x - | 0 |
| 12ம் வகுப்பு தேர்ச்சி | 10 | 1500 x 10 | 15000 |
| இளங்கலைப் பட்டம் | 4 | 1500 x 4 | 6000 |
| முதுகலைப் பட்டம் | - | 4000 x- | 0 |
| இளங்கலை பொறியியல் | 4 | 6000 x 4 | 24000 |
| முதுகலை பொறியியல் | | 0 | 0 |
| பாலடெக்னிக் | | 0 | 0 |
| மொத்தம் | **25** | **25** | **52500** |

**15. சிறுவர் மன்றம் - வட்டாரக்கூட்டம்**

சிறுவர் மன்றங்கள் வட்டாரக் கூட்டமாக இணைக்கப்பட்டுள்ளது. குழந்தைகளின் பங்களிப்பினை விரிவாக்கவும் அவர்களுக்கு புதிய புரிதல்களை கொடுக்கவும் இம்மன்றங்கள் வட்டாரமாக இணைக்கப்பட்டுள்ளது. கோரவள்ளி, கீழக்கரை, உச்சிப்புளி, , நரிப்பையூர், காவாகுளம், மாயாகுளம், மற்றும் திருப்புல்லானி ஆகிய சிறுவர் மன்ற வட்டாரங்கள் உள்ளது.



**வட்டாரக் கூட்டம் நடைபெற்ற விபரம்:**

| வ.எண், | வட்டார பெயர் | நாள் & இடம் |
|---|---|---|
| 1 | திருப்புல்லானி | 25-5-2017 ___மேதலோடை வடக்கு |
| 2 | காவாகுளம் | 28-04-2017 ___ எஸ்.காமராஜபுரம்<br>25-06-2017 ___ மேலக்கிடாரம்<br>22-01-2018 ___ அடஞ்சேரி |
| 3 | கோரவள்ளி | 13-05-2017 ___ சின்னரெட்டையூரணி |
| 4 | சாயல்குடி | 18-06-2017 ___ வி.வி.ஆர் நகர் |
| 5 | உச்சிப்புளி | 25-06-2017 - புதுவலசை |

## 16. குழந்தைகள் தின விழா

சிறுவர் மன்றக் குழந்தைகளின் சார்பாக குழந்தைகள் தின விழா சிறப்பாக நடைபெற்றது. குறிப்பாக மண்டபம் ஒன்றியத்தில் நத்தகுளம், வெள்ளரிஓடை, கோரவள்ளி மற்றும் இரட்டையூரணி ஆகிய கிராமங்களில் நடைபெற்றது. திருப்புல்லாணி ஒன்றியத்தில் அலைவாய்க்கரைவாடி கிராமத்திலும், கடலாடி ஒன்றியத்தில் கீழ அல்லிகுளம், மாணிக்கநகர், தொத்தன்மகன்வாடி கிராமங்களிலும் நடத்தப்பட்டது. மேலும் சி.எஸ்.ஐ தொடக்கப்பள்ளி ___ வேப்பமரத்துப்பனை, அம்பிகாபதி இந்து நாடார் நடுநிலைப்பள்ளி ___ வெள்ளப்பட்டி, 17-11-2017 அன்று கடலாடி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ___ காவாகுளம் ஆகிய இடங்களில் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டு கொண்டாடப்பட்டது. இதில் பனைத் தொழிலாளர் சங்கத்தினர், சிறுவர் மன்றக் குழந்தைகள், பெற்றோர், ஊராட்சி மன்ற உறுப்பிணர்கள், இளைஞர்கள் அங்கன்வாடி பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். சிறுவர் மன்றத்தினர் நாடகம், பாடல், நடனம் மற்றும் கதைகள் நிகழ்த்திக் காட்டினர்.குழந்தைகளுக்கு பனைத தொழிலாளர் சங்கத்தினர் பரிசுகள் வழங்கி பாராட்டியதுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.





**17.ஒன்றிய அளவிலான குழந்தைகள் கலைவிழா**

RWDS பணி செய்யும் கிராமங்களில் உள்ள 52 சிறுவர் மன்றங்களை ஒன்றிய அளவில் ஒன்றினைத்து குழந்தைகள் கலைவிழா கொண்டாடப்பட்டது. மண்டபம் ஒன்றியத்தில்

24-12-2017 அன்று கும்பரம் அரசு தொடக்கப்பள்ளியில் நடைபெற்றது. திருப்புல்லாணி ஒன்றியத்தில் 25-12-2017 அன்று மேதலோடை நாடார் மகாஜன சங்க உயர்நிலைப்பள்ளியில் குழந்தைகள் கலைவிழா நடைபெற்றது. கடலாடி ஒன்றியத்தில் 28-12-2017 அன்று வெள்ளப்பட்டி அம்பிகாவதி நாடார் நடுநிலைப்பள்ளியில் நடைபெற்றது.
குழந்தைகள் குழுக்களாக பிரிந்து கபடி, கோ ___ கோ மற்றும் வாலிபால் போன்ற விளையாட்டுகளில் பங்கேற்றனர். மூன்று ஒன்றியங்களிலும் 115+58=173 குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் கிளைச்சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பங்கேற்ற அனைத்து குழந்தைகளுக்கும் பைல், திருக்குறள், ஆங்கிலம் - தமிழ் அகராதி மற்றும் அப்துல் கலாம் புத்தகங்கள் பரிசளிக்கப்பட்டன.





**18. குழந்தைகளுக்கான திறன் வளர் பங்கேற்புகள் :**

பள்ளிக் கல்வித்துறை வாயிலாக நடத்தப்பட்ட ஒன்றிய அளவிலான அறிவியல் கண்காட்சி மற்றும் திறன் வளர் போட்டிகளில் சிறுவர் மன்றக்குழந்தைகள் பங்கேற்பு செய்துள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு :

| வ.எண் | குழந்தையின் பெயர் ரூ முகவரி | பங்கேற்பு விவரம் | பரிசு பெற்ற விபரம் |
|---|---|---|---|
| 1 | ஜெகன், த/பெ.பஞ்சு ராஜா — பூப்பாண்டியபுரம் | ஒன்றிய அளவிலான அறிவியல் கண்காட்சி | முதல் இடம் |
| 2 | தனுஷா, த/பெ.மங்கலசாமி — காவாகுளம் | பேச்சுப்போட்டி | முதல் இடம் |
| 3 | மோனிசா, த/பெ.நம்பு சின்னா - இரட்டையூரணி | ஒன்றிய அளவிலான அறிவியல் கண்காட்சி | இரண்டாம் இடம் |
| 4 | விகாசினி, த/பெ.முருகநாதன் - வெள்ளரிஓடை | ஒன்றிய அளவிலான அறிவியல் கண்காட்சி | முதல் இடம் |
| 5 | ரீதா, த/பெ.கேசவன் - வெள்ளரிஓடை | ஒன்றிய அளவிலான அறிவியல் கண்காட்சி | முதல் இடம் |
| 6 | பவதாரணி, த/பெ.பாரதிதாசன் - நத்தகுளம் | ஒன்றிய அளவிலான அறிவியல் கண்காட்சி | மூன்றாம் இடம் |
| 7 | திலகம், த/பெ.சோமசுந்தரம் - நத்தகுளம் | ஒன்றிய அளவிலான அறிவியல் கண்காட்சி | மூன்றாம் இடம் |
| 8 | தருண்ராஜ், த/பெ.பூமிநாதன் - சின்னரெட்டையூரணி | பேச்சுப்போட்டி | முதல் இடம் |
| 9 | இம்மானுவேல், த/பெ.செல்வம் - வேப்பமரத்துப்பனை | ஒன்றிய அளவிலான அறிவியல் கண்காட்சி | பங்கேற்பு |
| 10 | அல்வின் த/பெ.யோவான் - வேப்பமரத்துப்பனை | ஒன்றிய அளவிலான அறிவியல் கண்காட்சி | பங்கேற்பு |
| 11 | பரிசுத்தபார்த்திபன் த/பெ.பிலவேந்திரன் - பெரியநாயகிபுரம் | ஒன்றிய அளவிலான அறிவியல் கண்காட்சி | பங்கேற்பு |
| 12 | விவின்ராஜ் த/பெ.செந்தில் வேல் - காவாகுளம் | ஓவியப்போட்டி | முதல் இடம் |

## 19. நூறு சதவீத பள்ளி சேர்ப்பு பிரச்சாரம்

3 முதல் 18 வயது குழந்தைகளின் கல்வியை உறுதி செய்வது எமது நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்களின் ஒன்றாகும். அதை நிறைவேற்றும் முகமாக அனைத்துக் குழந்தைகளையும் அரசுப்பள்ளியில் சேர்க்க நாங்கள் பிரச்சாரம் மேற்கொள்கின்றோம். குறிப்பாக எங்களது பணித்தள கிராமங்கள் 52 லும் 3 வயது நிரம்பிய குழந்தைகளை அங்கன்வாடி மையத்திலும் 5 வயது நிரம்பிய குழந்தைகளை அரசு ஆரம்பப்பள்ளியிலும் சேர்க்கவேண்டும் என்று பிரச்சராம்

மேற்கொள்ளப்பட்டது. இதில் 7 ஊராட்சி அளவிலான பள்ளி சேர்ப்பு பிரச்சாரம், 32 கிராம அளவிலான பள்ளி சேர்ப்பு பிரச்சாரங்கள், 1 வட்டார அளவிலான பிரச்சாரமும் நடத்தப்பட்டன. இதில் பேரணி, கருத்தரங்கம் மற்றும் துண்டு பிரசுரம் விநியோகத்தல் மூலமும் பெற்றோர் மற்றும் பொதுமக்களுக்கு கல்வியின் முக்கியத்துவம் மற்றும் அரசுப்பள்ளில் சேர்க்கை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் 731 சிறுவர் மன்றக் குழந்தைகள், 658 பனைத்தொழிலாளர் சங்க பிரதிநிதிகள், ஊராட்சிமன்ற உறுப்பினர்கள். மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, குழந்தைகள் நலக்குழுமம், சைல்டு லைன் மற்றும் அங்கன்வாடி பணியாளரகள் மற்றும் பொதுமக்கள் ˙தன்னார்வத்துடன் கலந்துகொண்டனர்.





## 20.பள்ளிகளில் பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம்

பனைத்தொழிலுக்காக இடம்பெயர்ந்துள்ள குழந்தைகள் பிற குழந்தைகளிடமிருந்து வேறுபட்டவர்களாக உள்ளனர். அவர்கள் தொழில் நிமித்தமாக இடம்பெயர்ந்து தங்கியுள்ள பனங்காடுகளில் தண்ணீர் வசதியோ, மின்சார வசதியோ, போக்குவரத்து வசதியோ மற்றும் மருத்துவ வசதியோ முற்றிலும் இல்லை. எனவே அக்குழந்தைகளை நாம் அவர்களுடைய கண்ணோட்டத்தில் புரிந்துகொண்டு செயல்படுவது சிறந்ததாக அமையும். எனவே இதுகுறித்தான விழிப்புணர்வை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்கும் விதமாக பணியாளர் குழுவினர் 10-07-2017 அன்று கடலாடி ஊ.ஒ நடுநிலைப்பள்ளி பூப்பாண்டியபுரம், 26-10-2017 அன்று அரசு மேல் நிலைப்பள்ளி மேலக்கிடாரம், 07-11-2017 அன்று அரசு மேல்நிலைப்பள்ளி சாயல்குடி ஆகிய பள்ளிகளில் கலந்துரையாடினர். அரசு மேல்நிலைப்பள்ளிகளில் நடைபெற்ற கலந்துரையாடலில் பெற்றோர்களுக்கும் குழந்தைகளின் கல்வியில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டுமெனவும் அனைவரும் இணைந்து செயல்படுவோம் எனத் தெரிவித்தனர். கடலாடி ஊ.ஒ நடுநிலைப்பள்ளி பூப்பாண்டியபுரம் பள்ளியில் பனைத்தொழிலுக்காக இடம்பெயர்ந்துள்ள குழந்தைகளை எங்கள் பள்ளியில் சேர்த்துக்கொள்கிறோம் என்றனர்.



21. **புதிய ஆரம்பப்பள்ளி**

செங்கலநீரோடை மற்றும் பெரியநாயகிபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள 5 முதல் 10 வயது வரையிலான குழந்தைகளின் ஆரம்பக்கல்வியினை உறுதி செய்வது எமது நிறுவனத்தின் மிக முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக உள்ளது. செங்கலநீரோடை கிராமம் காஞ்சிரங்குடி ஊராட்சி, கீழக்கரை நகருக்கு அருகில் உள்ளது. இக்கிராமத்தில் மொத்தம் 250 மக்களும் 3 முதல் 5 வயது குழந்தைகள் 52 பேரும் உள்ளனர். இங்கு ஆரம்பப்பள்ளி இல்லாத காரணத்தால் குழந்தைகள் கீழக்கரை நகருக்கு 12 கி.மீ. தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளது, ஏனெனில் இக்கிராமத்திற்கு பேருந்து வசதியும் செய்து தரப்படவில்லை. இச்சூழல் 5-10 வயது குழந்தைகள் பள்ளி இடைவிலகலாவதை மேலும் அதிகரிக்கின்றது.

பெரியநாயகிபுரம், ராயப்பபுரம், மற்றும் காமராஜபுரம் ஆகிய கிராமங்களில் 600 மக்களும் 3 முதல் 5 வயதில் 143 குழந்தைகளும் உள்ளனர். இம்மூன்று கிராமங்களும் அருகருகில் அமைந்துள்ளன. இவை நரிப்பையூர் ஊராட்சிக்குட்பட்டது. இங்குள்ள குழந்தைகள் தினமும் 6கி.மீ. தூரம் நடந்து சென்று ஆரம்பப்பள்ளிக்கு செல்ல வேண்டியுள்ளது. குறிப்பாக கன்னியாகுமரி இராமநாதபுரம் கிழக்குக் கடற்கரைச் சாலையைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது. இது குழந்தைகளுக்கு பல சிரமங்களை ஏற்படுத்துவதுடன் பெற்றோருக்கும் பயத்தைக் கொடுக்கின்றது. எனவே இக்குழந்தைகளின் ஆரம்பக்கல்வியினை உறுதி செய்யும் முகமாக பெரியநாயகிபுரம் கிராமத்தில் புதிய ஆரம்பப்பள்ளி அமைப்பது அவசியமாக உள்ளது.

இப்பிரச்சனைகள் தொடர்பாக கிராம பிரதிநிதிகள் அடங்கிய கல்வி மேம்பாட்டுக் குழு பல்வேறு நடவடிக்கைகளை கடந்த இரண்டு ஆண்டுகளாக எடுத்து வருகின்றது. குறிப்பாக செங்கலநீரோடை கிராமத்தினர் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் வழக்குத்தொடர்ந்து புதிய ஆராம்பப்பள்ளி பெறுவதற்கான உயர்நீதிமன்ற ஆனை பெற்றுள்ளனர்.

**இவ்வாண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:**

- செங்கலநீரோடை கிளைச்சங்க மக்கள் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.மணிகண்டன் அவர்களை சந்தித்து புதிய ஆரம்பப்பள்ளி கோருதல்

தொடர்பாக மனு அளித்தனர். புதிய பள்ளிக்கான கட்டிடம் அமைத்து தருவதாக உறுதியளித்தார்.

- மேலும் செங்கலநீரோடை கிராமத்திற்கு புதிய ஆரம்பப் பள்ளி கோரி மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு அளிக்கப்பட்டது.

**22. அங்கன்வாடி மையம் சிறப்பாக நடைபெற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:**

3 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் முன்பருவக்கல்வியை உறுதி செய்ய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. நாங்கள் பணி செய்யும் 52 கிராமங்களில் 36 கிராமங்களில் மட்டுமே அங்கன்வாடி மையம் உள்ளது. மீதம் உள்ள 10 கிராமங்களில் அங்கன்வாடி மையம் இல்லை. மேலும் அங்கன்வாடி மையங்களில் உள்கட்டமைப்பு, மற்றும் செயல்பாடுகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. எனவே அங்கன்வாடி மையங்களை சிறப்பாக்க நாங்கள் எடுத்த செயல்பாடுகள் பின்வருமாறு:

**23. அலைபேசி - தகவல் மேலாண்மைத் திட்டம் குறித்த பயிற்சி**

சென்ற ஆண்டிண் தகவல் மேலாண்மைத் திட்டம் குறித்த பயிற்சியின் தொடர்ச்சியாக 12-02-2018, 13-02-2018 மற்றும் 14-02-2018 ஆகிய இரு தினங்களில் தகவல் மேலாண்மைத் திட்டம் குறித்து தொகுத்த விபரங்களை பதிவேடுகள் நிரப்புதல் குறித்த பயிற்சியினை CRY நிறுவனத்தில் வைத்து CRY அமைப்பினர் பயிற்சியளித்தார்கள். இதில் சுறுனுளு ன்பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

12-03-2018 ___ 14-03-2018 ஆகிய மூன்று நாட்கள் சென்னை பரிபூரண மையம் - இக்சா வில் நடைபெற்ற குழந்தைகள் குழுக்களை வலுப்படுத்துதல் சம்மந்தமான பயிற்சியில் இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.





**24. பள்ளி மேலாண்மைக் குழு பயிற்சி :**

குழந்தைகளின் ஆரம்பக்கல்வியினை உறுதி செய்யும் நோக்குடன் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 முழுமையாக அமல்படுத்தும்படி அரசினை நிர்பந்திக்கும் பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றோம். இதன் தொடர்ச்சியாக பெற்றோர்களுக்கு பள்ளி

மேலாண்மைக் குழு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் இந்த வருடம் வட்டார அளவிலான பள்ளி மேலாண்மைக் குழு புத்தாக்கப் பயிற்சி நடைபெற்றது.

17-12-2017 அன்று (நத்தகுளம் கிராமத்தில்) கோரவள்ளி வட்டாரம் மற்றும் (மேதலோடை கிராமத்தில்) திருப்புல்லாணி வட்டாரம், 22-12-2017 அன்று (பூப்பாண்டியபுரம் கிராமத்தில் ) சாயல்குடி மற்றும் நரிப்பையூர் வட்டாரங்களுக்கான பள்ளி மேலாண்மைக்குழு புத்தாக்க பயிற்சி நடைபெற்றது. இதில் இயக்குநர் சா.சாத்தையா, ஒருங்கிணைப்பாளர் து.கனகவள்ளி மற்றும் குழந்தைத்தொழிலாளர்குழு ஒருங்கிணைப்பாளர் ம.மரியஸ்டெல்லா ஆகியோர் பயிற்சியளித்தனர்.




**25. பனைத்தொழிலாளர்சங்கம் - வட்டார கூட்டம்:**

பனைத்தொழிலாளர்களின் வளர்ச்சியினை உறுதி செய்யும் நோக்குடன் பனைத் தொழிலாளர் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சங்கம் கிராம அளவில் உருவாக்கப்பட்டு, வட்டாரமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் தலைமை சங்கம் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மட்டத்திலும் 1 தலைவர், 1 துனைத் தலைவர், 1 செயலாளர், 1 இணைச் செயலாளர் மற்றும் 1 பொருளாளர் ஆகியோர் அடங்கிய நிர்வாகக் குழு உள்ளது. கிராமச் சங்கம் மாதம் ஒரு முறையும், வட்டாரச் சங்கம் இரண்டு மாதத்திற்கு ஒரு முறையும் மாவட்டச் சங்கம் ஆண்டுக்கு ஒரு முறையும் கூடுகின்றது.

| வ.எண் | வட்டரா பெயர் | நாள் & இடம் | கலந்து கொண்டவர்கள் விபரம் |
|---|---|---|---|
| 1 | திருப்புல்லானி | 17-12-2017 ___ மேதலோடை தெற்கு | 4+51=54 |
| 2 | உச்சிப்புளி | 11-12-2017 ___ குயவன்குடி | 7+20=27 |
| 3 | கோரவள்ளி | 11-12-2017 ___ நத்தகுளம் | 1+38=39 |
| 4 | காவாகுளம் | 19-02-2017 ___ அடஞ்சேரி | 8+11=19 |
| 5 | சாயல்குடி | 19-12-2017 ___ பூப்பாண்டியபுரம் | 7+15=22 |



## இயக்குநர் அவர்களின் பிற செயல்பாடுகள் :

25-5-2017 அன்று சென்னை இக்சா மையத்தில் நடைபெற்ற சமகல்வி இயக்க நிர்வாகக்குழு கூட்டத்தில் இயக்குநர் அவர்கள் கலந்து கொண்டார்.

11-07-2017 அன்று சென்னை இக்சா மையத்தில் நடைபெற்ற சமகல்வி இயக்க நிர்வாகக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்

14-8-2017 அன்று மதுரை ஆர்த்தி விடுதியில் நடைபெற்ற பனை பொருளாதார மாநில மாநாட்டிற்கான ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டார்.

9-9-2017 மற்றும் 10-9-2017 ஆகிய இரண்டு நாட்களில் சிதம்பரத்தில் நடைபெற்ற பனைப்பொருளாதார மாநில மாநாட்டு நிகழ்ச்சியில் தலைவர் திரு.டி.ஆர்.சந்திரன், இயக்குநர் மற்றும் பணியாளர்கள் திருமதி.நிர்மலா மற்றும் திருமதி.பாக்கியலெட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

15-09-2017 அன்று சென்னை ஆஷா நிவாஸ் மையத்தில் மக்கள் நலவாழ்வு இயக்கத்தின் சார்பாக நடைபெற்ற சுகாதார ஆய்வு சம்பந்தமாக கூடுகையில் இயக்குநர் மற்றும் பணியாளர் ச.ராஜாத்தி கலந்து கொண்டனர்

25-09-2017 அன்று சென்னை இக்சா மையத்தில் நடைபெற்ற சமகல்வி இயக்க நிர்வாகக்குழு கூட்டத்தில் இயக்குநர் அவர்கள் கலந்து கொண்டார்

22-10-2017 அன்று கோயம்புத்தூர் பேரூர் சாந்தலிங்க அடிகளார் ஆசிரமத்தில் நடைபெற்ற பனைபொருளாதார மாநாட்டில் இயக்குநர் அவர்கள் கலந்து கொண்டார்.

23-12-2017 அன்று மதுரை மூட்டா அலுவலகத்தில் மக்கள் நலவாழ்வு இயக்கம் சார்பான கலந்தாய்வு கூட்டத்தில் இயக்குநர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் அவர்கள் கலந்து கொண்டார்.

09-01-2018 அன்று சென்னை கிரை அலுவலகத்தில் நடைபெற்ற கிரை பங்காளர் கூடுகையில் கலந்து இயக்குநர் அவர்கள் கலந்து கொண்டார்

10-01-2018 அன்று சென்னை இக்சா மையத்தில் நடைபெற்ற சமகல்வி இயக்க திட்டமிடல் கூடுகையில் கலந்து கொண்டார்

11-01-2018 அன்று சென்னை சேப்பாக்கம் மையத்தில் நடைபெற்ற தலித் குழந்தைகளின் மேல்நிலைக்கல்விக்கான கல்வி உதவித்தொகை சம்பந்தமான கூடுகையில் கலந்து கொண்டார்

16-01-2017 மற்றும் 17-01-2017 ஆகிய நாட்களில் கோயம்புத்தூர் பேரூர் நடைபெற்ற பனைப்பொருட்கள் மாநாட்டில் இயக்குநர், பணியாளர்கள்திருமதி. பாக்கியலெட்சுமி மற்றும் திருமதி ராசாத்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

24-01-2018 அன்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் நடைபெற்ற குழந்தைகள் பாதுகாப்பு குறித்தான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

23-03-2018 அன்று சென்னையில் சமகல்வி இயக்கம் சார்பாக நடைபெற்ற அரசுப்பள்ளிகள் குறித்தான ஆய்வறிக்கை வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டார்

2018 — மார்ச் 26,27,28,29,30 மற்றும் 31 ஆகிய நாட்களில் பேக்கரும்பு அப்துல்கலாம் நினைவிடத்தில் அமைக்கப்பட்டிருந்த மாவட்ட அளவிலான மகளிர் திட்ட கண்காட்சியில் RWDS சார்பாக கலந்து கொண்டு பனைப்பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டது.

----------------------------- * ------------------------------